## ஊவா மகாண சபை - 2018

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

ஊவா மாகாண சபையின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(1) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. மாகாண சபைகள் அதிகாரச்சட்டத்தின் 23(2) ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) உப பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பொழிப்பு அறிக்கை 2019 மே 29 ஆந் திகதி வெளியிடப்பட்டதுடன், தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) உப பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 30 ஆந் திகதி வெளியிடப்பட்டது. அரசியலமைப்புச் சட்டத்தின் 154(6) ஆம் உறுப்புரை மற்றும் தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உப பிரிவின் பிரகாரம் அந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊவா மாகாண சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

மாகாண சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் மாகாண திறைசேரி உள்ளடங்களான அந்தந்த நிறுவனங்களின் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் ஊவா மாகாண சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாகாண சபையின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை**

**1.6.1 கணக்கீட்டு குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாண நூலக சேவை சபைக்குரிய புத்தங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நூலக புத்தங்களின் பெறுமதி இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | எதிர்வரும் காலங்களில் புத்தகங்களின் பெறுமதியை கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் புடவைக் கைத்தொழில் அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் மீளாய்வாண்டின் போது வைப்புக் கணக்கிற்கு செலவு வைத்தல் ரூபா 16,651,685 ஆக இருந்த போதிலும், திரட்டிய நிதிக்கூற்றுக்களில் ரூபா 18,150,786 ஆக இருந்தமையால் ரூபா 1,499,101 ஆன வேறுபாடொன்றும் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் வரவு வைத்தல் ரூபா 18,150,786 ஆக இருந்த போதிலும் திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 16,651,685 ஆக இருந்தமையால் ரூபா 1,499,101 வேறுபாடும் காணப்பட்டது. | நிறுவனங்களால் சமர்ப்பிக்கப்படும் கணக்கு தகவல்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். | உரிய நிறுவனங்களின் கணக்குகளில் வரவு, செலவு பதிவுகள் மாற்றிக் காண்பித்ததால் வேறுபாடு எழுந்திருந்தன. |
| (இ) | மீளாய்வாண்டினுள் அமைச்சொன்றினதும் திணைக்களம் ஒன்றினதும் ஒதுக்கீட்டுக் கணக்கின் பிரகாரம் கட்டுநிதி கணக்கிற்கு வரவு வைத்ததினால் கூட்டுத்தொகை ரூபா 5,279,371,144 ஆக இருந்த போதிலும் திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அவ்வரவு வைத்தல் ரூபா 128,735,964 ஆக இருந்தமையால் ரூபா 5,150,635,180 ஆன வேறுபாடு காணப்பட்டது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் கணக்கு தகவல்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். | அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு தயாரிக்கும் போது வரவு மற்றும் செலவுப் பதிவு செய்யும் தவறினால் வேறுபாடு இடம்பெற்றுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டினுள் அமைச்சொன்றினதும் திணைக்களம் ஒன்றினதும் ஒதுக்கீட்டுக் | திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் கணக்கு | அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கை தயாரிக்கும் |

| | | | |
|---|---|---|---|
| | கணக்கின் பிரகாரம் கட்டுநிதி கணக்கிற்கு செலவு வைத்ததினால் கூட்டுத்தொகை ரூபா 5,288,469,527 ஆக இருந்த போதிலும் திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அச்செலவு வைத்தல் ரூபா 18,208,,961 ஆக இருந்தமையால் ரூபா 5,270,260,566 ஆன வேறுபாடு காணப்பட்டது. | தகவல்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். | போது வரவு மற்றும் செலவுப் பதிவு செய்யும் தவறினால் வேறுபாடு இடம்பெற்றுள்ளது. |
| (உ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு அமைச்சினதும் திணைக்களம் ஒன்றினதும் கட்டுநிதி மீதிகளுடன் திரட்டிய நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் கட்டுநிதி மீதிகளை ஒப்பிடும் போது ரூபா 122,550,866 ஆன வேறுபாடு அவதானிக்கப்பட்டது. | திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் கணக்கு தகவல்கள் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். | ஒதுக்கீட்டுக் கணக்கை தயாரிக்கும் போது தரவுகளை பதிவு செய்யும் தவறினால் இடம்பெற்றுள்ளது. |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபையின் 03 நிறுவனங்களினால் தயாரிக்கப்பட்ட வர்த்தக முற்பணக் கணக்குகளில் செலுத்த வேண்டிய முற்பண மீதிகள் காண்பிக்கப்படாமையால் திரட்டிய நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் தீர்க்கப்பட வேண்டிய முற்பண மீதி ரூபா 4,777,252 ஆக இருந்தது. | நிறுவனத்தின் தகவல் மற்றும் திரட்டிய நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்படும் தகவல்களுடன் இணங்க வேண்டும். | எதிர்வரும் காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மாகாண சபை நிதிக்கூற்றுக்களில் பிரதேச செயலகம் ஒன்று உட்பட 08 மாகாண சபை நிறுவனங்களுக்குரியதாக காணப்பட்ட தீர்க்கப்பட வேண்டிய கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 153,661,846 ஆக இருந்தது. | ஆண்டின் இறுதியில் கட்டுநிதி மீதிகளை தீர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்ட தகவல்கள் சரியானது. |
| (ஏ) | 10 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக மாகாண சபையின் நிதிக்கூற்றுக்களில் சொத்துக்களாக காண்பிக்கப்பட்டிருந்த ரூபா 40,326,651 ஆன கடன் தொகை மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடப்பட வேண்டிய கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இத்தகவல்கள் சரியானது. |
| (ஐ) | முன்னைய ஆண்டின் நிதிஏற்பாடுகளைப் பயன்படுத்தி கொள்வனவு செய்யப்பட்டிருந்த பதுளை உதவி விவசாய பணிப்பாளர் அலுவலகத்தின் மூலம் விவசாயிகளுக்கு வழங்கியிருந்த ரூபா 4,703,540 பெறுமதியான வெவ்வேறு வகையான 19 விடயங்களுக்குரிய பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பவற்றை விவசாயிகளால் பொறுப்பேற்றதாக முறையான சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | பொருட்களை பகிர்ந்தளிக்கும் போது அப்பொருட்களை பொறுப்பேற்பதாக உறுதிப்படுத்த வேண்டும். | உபகரணங்கள் மற்றும் பொருட்கள் விவசாயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்குரிய பகிர்ந்தளிக்கும் அட்டவணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |

### 1.6.2 இணக்கமின்மை

தெரிவுக் கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|
| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | | |
| (அ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கை | திட்டவட்டமான அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் சமூக வலுவூட்டல் வசதிகளுக்கான செலவிடப்படக்கூடிய செலவின எல்லையை மிகைத்து ரூபா 3,283,428 அதாவது மொத்த செலவினத்தில் 53.7 சதவீதமும் சுயதொழில் மேம்பாடு மற்றும் சமய கலாசார கலை அலுவல்களுக்காக அங்கீகரிக்கப்பட்ட செலவினத்தில் 10 சதவீதத்திற்கு குறைந்த அளவும் செலவிடப்பட்டிருந்ததுடன் நீர்ப்பாசன மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்காக எவ்வித செலவினமும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உறுப்பினர்களால் முன்மொழிவுகளை வழங்கும் போது சமூக உட்கட்டமைப்பு வசதிகள் வகைக்கு கூடிய முன்மொழிவுகள் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) | 1996 ஆகஸ்ட் 01 ஆந் திகதிய 96/05 ஆம் இலக்க காணி ஆணையாளர் சுற்றறிக்கை | வெள்ளவாய மற்றும் அல்ல பிரதேச செயலகங்களினால் காணி வரி பிரிவொன்று ஸ்தாபிக்கப்பட்டிருக்க வில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிரதேச செயலகத்திற்கு போதியளவு இடவசதிகள் காணப்படாமையால் வரி பிரிவு ஸ்தாபிக்கப்படாதிருந்த துடன் குறிப்பிடப்பட்ட இடமொன்றை ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | 2017 மே 29 ஆந் திகதிய 2017/07 ஆம் இலக்க ஊவா | பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தும் போது | வழங்குனர் நிறுவனத்தின் பெயரில் காசோலை | பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தும் போது |

| | | | | |
|---|---|---|---|---|
| | மாகாணத்தின் கல்வி பணிப்பாளரின் சுற்றறிக்கை | எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தமது சொந்த பணத்திலிருந்து உணவிற்காக கொடுப்பனவு செய்து பின்னர் மீளளிப்பதற்காக சமர்ப்பிக்க கூடாததுடன் உரிய வழங்குனருக்கு மாத்திரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும் எனினும், மொனறாகல கல்வி வலயத்தினால் நடாத்தப்பட்ட 2017 ஆம் ஆண்டின் விளையாட்டு போட்டி மற்றும் 03 பயிற்சி முகாம்களுக்காக ரூபா 216,300 ஆன உணவுச் செலவினத்தை மீள் நிரப்புவதற்குரிய காசோலை உதவிப் பணிப்பாளரின் (விளையாட்டு) தனிப்பட்ட பெயருக்கு வழங்கப்பட்டிருந்தது. | வழங்கப்பட வேண்டும். | நிகழ்ச்சிகளுக்குரிய நிதிஏற்பாடு அநேகமாக நிகழ்ச்சிகள் நடாத்தப்பட்டதன் பின்னரே பணம் கிடைக்கப் பெறுகின்றது. இதனால் சகல செலவினங்களும் விடயத்திற்குப் பொறுப்பான உதவி பணிப்பாளரினால் தனிப்பட்ட பணத்திலிருந்து செலவிடப்பட்டதன் பின்னர் அவரின் தனிப்பட்ட பெயரில் காசோலை வழங்கப்பட்டு செலவினம் தீர்க்கப்பட்டது. |
| (ஈ) | 1996 இன் 01 ஆம் இலக்க ஊவா மாகாண வியாபார பெயர் நியதிச்சட்டம் | பதிவு செய்யப்பட்ட நபர்கள், மற்றும் வியாபார கம்பனிகள் இருக்கும் போது விதிக்கோவை பதிவு செய்யும் போது தவறுகள் மற்றும் தண்டங்கள், வியாபார பெயர்கள், அகற்றும் ஏற்பாடுகள், போன்றவை தொடர்பாக நடைமுறையொன்று தயாரிக்கப்படாமை காரணமாக அல்ல பிரதேச செயலக பிரிவின் இந்நியதிச் சட்டத்திற்கு முரணாக நடவடிக்கை எடுக்கும் வியாபார உரிமையாளர்கள் இனங்காணப்பட்டு உரிய நடவடிக்கைகள் எடுக்க முடியாதிருந்தது. | உரிய நியதிச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. |

2. வருமான நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 13 ஆவது அரசியலமைப்பு திருத்த சட்டத்தினால் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள 13 வருமான விடயங்கள் தொடர்பாக ஊவா மாகாண சபையின் நிதியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை. | மாகாண சபைகக்கு கையளிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக நியதிச் சட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நியதிச் சட்டங்கள் நிறைவேற்றுவது அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்கள் தெரியப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | 2018 ஆம் ஆண்டிற்காக வருடாந்த மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்டிருந்த 18 வருமான விடயங்களின் மதிப்பிடப்பட்ட வருமானம் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட்ட வருமான விடயங்களுக்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம் குறிப்பிடப்பட வேண்டும். | தரப்படுத்தப்பட்ட வருமான விடய இலக்கங்கள் மதிப்பீட்டிற்கு உள்ளடக்கப்பட வேண்டும். |
| (இ) | 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி சாசனத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் ஊவா மாகாணத்தில் அமைந்துள்ள அசையாத ஆதனங்களை கையளிப்பதற்குரிய பத்திரங்களுக்காக அறவிடப்படும் முத்திரைக் கட்டணங்களாக மாகாண இறைவரி ஆணையாளரால் மதிப்பிடப்பட்ட மேலதிக முத்திரைக் கட்டணங்கள் அறவிடும் போது மீண்டும் மதிப்பீட்டிற்காக தகைமையுடைய துறைசார் மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | நிதி சாசனத்தின் 37 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மாகாண இறைவரி மதிப்பீடு மற்றும் வரி உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | 1990 இன் 08 ஆம் இலக்க ஊவா மாகாண நிதி சாசனத்தின் 104(அ) பிரிவின் பிரகாரம் மாகாண இறைவரி ஊக்குவிப்பு நிதியமொன்றை தாபிக்காமல் மாகாண இறைவரி ஆணையாளர் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கு 2010,2011, 2015,2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் ரூபா 14,214,552 ஆன ஊக்குவிப்பு படிகள் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தன. | மாகாண நிதி சாசனத்தின் 104(அ) பிரிவின் பிரகாரம் மாகாண இறைவரி ஊக்குவிப்பு நிதியமொன்றை தாபிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் ஆளுனரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். |
| (உ) | ஊவா மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்தின் 2010-2016 காலப்பகுதியில் நடாத்தப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 147,148 தொகை 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை | அறவிடப்பட வேண்டிய தொகையை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். | 2019 ஏப்ரல் 30 இல் உள்ளவாறு மீதியான ரூபா 97,126 எதிர்காலத்தில் அறவிடப்பட நடவடிக்கை |

| | | | |
|---|---|---|---|
| | அறவிடப்பட்டிருக்கவில்லை. | | எடுக்கப்படும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 வருமான விடயங்களில் திரண்ட நிலுவை வருமானம் ரூபா 147,876,075 ஆக இருந்தது. | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். | நிலுவை வருமானம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மாகாண சபையின் நிதிய நடவடிக்கைகளின் நிதி விளைவுகள் ரூபா 3,300,892,380 ஆன பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 207,181,480 ஆக இருந்தது.

### 3.2 வருமானம் மற்றும் செலவினம்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டின் வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான பொழிப்பொன்று கீழே காட்டப்பட்டுள்ளது.

| | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ளபடி யானவை | முரண் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வருமானம் | | | | | | |
| வரி வருமானம் | 3,711,650,000 | 3,137,004,798 | (574,645,202) | 3,068,195,000 | 2,925,591,682 | (142,603,318) |
| வரியல்லாத வருமானம் | 608,350,000 | 570,836,175 | (37,513,825) | 371,805,000 | 561,658,971 | 189,853,971 |
| அரசாங்க மானியம் | 19,566,798,000 | 19,053,001,000 | (513,797,000) | 18,820,751,000 | 19,456,886,980 | 636,135,980 |
| **மொத்தம்** | **23,886,798,000** | **22,760,841,973** | **(1,125,956,027)** | **22,260,751,000** | **22,944,137,633** | **683,386,633** |

| | 2018 | | | 2017 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் | பாதிடப் பட்டவை | உள்ள படியானவை | முரண் |
| செலவினம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| ஆளணி வேதனம் | 490,691,000 | 399,828,138 | 90,862,862 | 15,196,717,000 | 16,505,876,088 | (1,309,159,088) |
| ஏனைய மீண்டெழுபவை | 19,540,710,000 | 19,907,077,670 | (366,367,670) | 4,141,994,000 | 3,563,043,189 | 578,950,811 |
| மூலதனச் செலவினம் | 20,031,401,000 | 20,306,905,808 | (275,504,808) | 19,338,711,000 | 20,068,919,277 | (730,208,277) |
| | 3,855,379,000 | 2,937,300,565 | 918,078,435 | 2,993,750,000 | 3,390,850,109 | (397,100,109) |
| மொத்தம் | <u>23,886,780,000</u> | <u>23,244,206,373</u> | <u>642,573,627</u> | <u>22,332,461,000</u> | <u>23,459,769,386</u> | <u>1,127,308,386</u> |

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 22,760,841,973 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 19,053,001,000 தொகை அரச மானியங்களாக இருந்தன. வரி வருமானம் ரூபா 3,137,004,798 அதாவது மொத்த வருமானத்தில் 14 சதவீதமும் வரியல்லாத வருமானம் ரூபா 570,836,175 அதாவது மொத்த வருமானத்தில் 2 சதவீதமாக இருந்தது. ஆண்டின் மொத்த வருமானமான ரூபா 22,760,841,973 இல் மீண்டெழும் செலவினத்திற்காக ரூபா 20,306,905,808 அல்லது 89 சதவீதம் மூலதனச் செலவினத்திற்காக ரூபா 2,937,300,565 அதாவது 13 சதவீதமும் பயன்படுத்தப்பட்டிருந்தது. 13 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள வருமான விடயங்களிலிருந்து போதியளவு வருமானம் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்டுள்ள வருமான விடயங்களிலிருந்து போதியளவு வருமானமொன்றை சேகரித்தல் பொருத்தமாகும். | கருத்து தெரிவித்திருக்கவில்லை |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 அரச மானியம்

| கணக்காய்வு அவதானிப்பு | | | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|---|
| நிதி மூலம் | அங்கீகரிக்கப்பட்ட தொகை | செலவிடப்பட்ட தொகை | குறைப் பயன்பாடு | | |
| | ரூபா | ரூபா | ரூபா | | |
| கருதுகோள் அடிப்படையிலான நன்கொடைகள் | 559,600,000 | 400,200,000 | 159,400,000 | நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்த வேண்டும் | கருத்து தெரிவித்திருக்க வில்லை |
| மாகாண திட்ட வட்டமான அபிவிருத்தி நன்கொடைகள் | 3,172,997,000 | 1,982,600,000 | 1,190,397,000 | | |
| உலக வங்கி உதவி | 546,800,000 | 401,800,000 | 145,000,000 | | |
| | 4,279,397,000 | 2,784,600,000 | 1,494,797,000 | | |

மாகாணத்தின் அபிவிருத்தி பணிகளுக்காக கிடைத்திருந்த அரசாங்க மானியங்கள் மற்றும் அவற்றின் பயன்பாடு தொடர்பான விபங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

#### 4.1.2 மாகாண அபிவிருத்தி திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக மாகாண அபிவிருத்தி திட்டத்தின் கீழ் புதிய பணிகள் மற்றும் தொடர்வேலை ஆகியவற்றுக்காக ரூபா 3,794.72 மில்லியன் மதிப்பீட்டு பெறுமதியுடைய 3,481 முன்மொழிவுகள் அங்கீகரிக்கப்பட்டிருந்தன. மாகாண சபையின் செயன்முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் வேலை முன்மொழிவுகளின் செயன்முன்னேற்றம் பின்வருமாறு ஆகும். | உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்ட முன் மொழிவுகளை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| விபரம் | புதிய பணி | தொடர் வேலை | மொத்த வேலைகள் |
|---|---|---|---|
| முழுமையாக நிறைவு செய்யப்பட்ட | 2838 | 206 | 3044 |
| 50% இனை விட அதிகமாக நிறைவு செய்யப்பட்ட | 229 | 18 | 247 |
| 50% இனை விட குறைவாக செய்யப்பட்ட | 61 | 3 | 64 |
| ஆரம்பிக்கப்பட்டிராத | 87 | 1 | 88 |
| | 38 | - | 38 |
| | ------- | ------ | -------- |
| | 3253 | 228 | 3481 |

### 4.1.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பஸ்ஸர வலயக் கல்வி அலுவலகத்தினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான இலக்குகளில் உள்ளடக்கப்பட்டுள்ள இலக்குகளை நோக்கத்தினை நிறைவேற்றக்கூடிய வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படாதிருந்ததுடன் வெளிமட வலயக் கல்வி வலய அலுவலகத்தினால் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 06 செயற்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட தயாரிக்கப்பட்டு அதில் உள்ளடக்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற வேண்டும். | ஆண்டு பூராகவும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்படுகின்றன. |

### 4.1.4 பாடாசலை செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பஸ்ஸர கல்வி வலயத்திற்குரிய பாடசாலைகளிலிருந்து 50 சதவீதத்திற்கு மேற்பட்ட பாடசாலை எண்ணிக்கையிலான மாணவர்கள் 2014-2018 வரையான ஆண்டுகளில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருக்கவில்லை. 50 சதவீதத்திற்கு அண்மித்த பாடசாலையின் எண்ணிக்கையில் கா.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்கு 2013-2017 ஆண்டுகளில் தோற்றிய மாணவர்களின் சித்தியடைதல் சதவீதம் 50 சதவீதத்திற்கும் குறைவாக இருந்தது. | மாணவர்களின் கல்வி நிலைமையை மேம்படுத்த வேண்டும். | கல்வி பெறுபேறுகளை அதிகரிப்பதற்கு தேவையான புதிய வேலைத் திட்டமொன்று செயற்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | பஸ்ஸர கல்வி வலயத்தின் விசேட கல்வி தேவைப்பாடுகள் உள்ள 7 மாணவர்கள் விசேட கல்வி பிரிவிற்கு தொடர்புபடுத்தப்படாதிருந்ததுடன் 11 முறைசாரா கல்வி பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 02 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | விசேட கல்வி தேவைப்பாடு உள்ள மாணவர்களின் கல்வி நிலைமைகளை மேம்படுத்தும் வகையில் பாடநெறிகள் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும். | நிதிஏற்பாடு கிடைத்திருக்கவில்லை. |
| (இ) | பஸ்ஸர கல்வி வலயத்தினுள் மாணவர் எண்ணிக்கை 50 இற்கு குறைந்த மூடும் ஆபத்தை எதிர்நோக்கியுள்ள பாடசாலைகளில் எண்ணிக்கை 23 ஆக இருந்தது. | பாடசாலைகளில் மாணவர் எண்ணிக்கையை அதிகரித்துக் கொள்வதற்கான நடைமுறை தொடர்பில் முகாமைத்துவம் கவனம் செலுத்தியுள்ளது. | கஷ்டப் பிரதேசங்களில் அமைந்திருந்தமை மற்றும் மாணவர் நகர்புர பாடசாலைக்கு இடம்பெயரல் |
| (ஈ) | மஹியங்கன கல்வி வலயத்தின் 2017 ஆம் ஆண்டில் கா.பொ.த (சா.த) பரீட்சை தோற்றிய 46 பாடசாலைகளின் 18 பாடசாலைகளின் பரீட்சை பெறுபேறுகள் 50 சதவீதத்திற்கு குறைந்த சதவீதமாக இருந்ததுடன் 02 பாடசாலைகளின் பெறுபேறு பூச்சியமாக இருந்தது. சகல மாணவர்களும் கணிதத்தில் சித்தியடையாத 04 பாடசாலைகள் காணப்பட்டதுடன் 2017 இல் புலமைப்பரிசில் நடாத்தப்பட்ட 71 பாடசாலைகளில் மாணவர்களின் தடைதாண்டல் புள்ளி மட்டத்தை அடையாத 36 பாடசாலைகள் காணப்பட்டன. | மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தப்பட வேண்டும். | புலமைப் பரிசில் பெறுபேறுகள் படிப்படியாக அதிகரித்துள்ளதுடன் க.பொ.த(சா.த) மற்றும் க.பொ.த (உ.த) பரீட்சைகளின் பெறுபேற்றை உயர்த்துவதற்கு வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் செயற்படுத்தப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | 2015-2017 ஆம் ஆண்டுகளில் க.பொ.த (உ.த) பரீட்சையின் பெறுபேறுகளின் பிரகாரம் விஞ்ஞானம் மற்றும் கணித விடயப் பரப்புக்களில் சித்தியடைதல் சதவீதம் முறையே 24 - 31 சதவீதம் முதல் 24 -38 சதவீதம் வரையான குறைந்த மட்டத்தில் காணப்பட்டன. | | |
| (உ) | மஹியங்கன கல்வி வலயத்தில் விசேட கல்வி வழங்கப்பட வேண்டிய 08 மாணவர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் புதிய விசேட கல்வி பிரிவு தாபிக்கப்பட்டு அவர்களை விசேட கல்வி நியமனத்துடன் கூடிய ஆசிரியர் ஒருவருக்கு தொடர்புபடுத்தப்படவில்லை. அவ்வாறே பாடசாலை செல்லாத 32 மாணவர்கள் இனங்காணப்பட்டிருந்த போதிலும் அதில் 12 மாணவர்கள் மாத்திரம் பாடசாலைகளுக்கு தொடர்புபடுத்தப்பட்டிருந்தனர். | விசேட கல்வி தேவையுடைய மாணவர்கள் இனங்காணப்பட்டு அவர்களின் கல்வி நிலைமைகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிள்ளைகளின் குடும்ப சூழலில் காணப்படும் சிக்கல்கள் காரணமாக பிள்ளைகளை பாடசாலைக்கு தொடர்புபடுத்த முடியாதுள்ளது. |
| (ஊ) | வெளிமட கல்வி வலயத்தில் 2015 - 2018 வரை ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றாத பாடசாலைகள் முறையே 99, 99, 97 மற்றும் 99 மற்றும் முறையே 59, 51, 37 மற்றும் 52 பாடசாலைகளில் எந்தவொரு மாணவர் சித்தியடைந்திருக்கவில்லை. அவ்வாறே அம் மாணவர்கள் சித்தியடையாத பாடசாலை ஒரே பாடசாலையொன்றாக அவதானிக்கப்பட்டது. | மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தப்பட வேண்டும். | 2016 முதல் 2018 ஆம் ஆண்டு வரை முறையே பரீட்சை பெறுபேறுகள் படிப்படியாக முன்னேறியுள்ளன. |
| (எ) | வெளிமட கல்வி வலயத்தில் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் போது இனங்காணப்பட்ட பாடசாலைக்கு செல்லாத மற்றும் பாடசாலையை விட்டுச் செல்லும் மாணவர்களுக்கு இடையே முறையே 28 மாணவர்கள் மற்றும் 12 பேர் மீண்டும் பாடசாலைக்கு தொடர்புபடுத்தப்பட்டிருக்க வில்லை. | பாடசாலை செல்லாத மற்றும் விட்டுச் செல்லும் மாணவர்களை பாடசாலைக்கு செல்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பவுத தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் வெவ்வேறு காரணங்களினால் பாடசாலைக்கு அனுப்ப முடியாதுள்ளது. |
| (ஏ) | வெளிமட வலயக் கல்வி அலுவலகத்தினால் 2018 ஆம் ஆண்டிற்காக 18 முறைசாரா கல்வி பாடநெறிகளை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 06 பாடநெறிகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தன. | இலக்கிடப்பட்ட பாடநெறிகள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | பாடநெறிகளை நடாத்துவதற்கு நிதிஏற்பாடு கிடைக்கவில்லை. |
| (ஐ) | பஸ்ஸர மற்றும் வெளிமட கல்வி வலயங்களில் பாடசாலை தவணையொன்றுக்கு குறைந்தது ஒரு தடவையாவது மேவுகை செய்யப்படும் வகையில் சில பாடசாலைகளில் கண்காணிக்கப்படாதிருந்ததுடன் மேற்பார்வை | பாடசாலை மேற்பார்வை நடவடிக்கைகள் முறைப்படுத்தப்பட்டு அப்பாடசாலைகளின் | எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

| | |
|---|---|
| செய்யப்பட்ட பாடசாலைகளிலும் கல்வியின் தரக் குறியீடுகளை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கல்வி தரத்தை அதிகரிப்பதற்கு எதிர்காலத்தில் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

### 4.1.5 ஏனைய அவதானிப்புக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் வருடாந்த மதிப்பீட்டை தயாரிக்கும் போது 5 ஆந் தர புலமைப்பரிசில்களைப் பெறும் மாணவர் எண்ணிக்கை தொடர்பாக கருத்திற் கொள்ளாமல் புலமைப் பரிசில் செலவினம் மதிப்பீடு செய்யப்பட்டமையால் 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,340,000 மற்றும் 2018 ஆம் ஆண்டிற்கான ரூபா 350,000 ஆன குறை மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே ஊவா மாகாணத்தின் 04 வலயக் கல்வி அலுவலகத்திற்குரியதாக 2017 ஆம் ஆண்டிற்காக ரூபா 3,311,500 ஆன மற்றும் 09 கல்வி வலய அலுவலகங்களுக்குரிய 2018 ஆம் ஆண்டிற்காக ரூபா 7,343,500 ஆன புலமைப்பரிசில் கொடுப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை. | புலமைப்பரிசில் வழங்குவது தொடர்பாக நடைமுறைச் சாத்தியமான மற்றும் சரியான மதிப்பீடு தயாரிக்கப்பட்டு அப்பணத்தை மாணவர்களுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | புலமைப்பரிசில் பெற்றுக் கொள்ளும் மாணவர்கள் எண்ணிக்கையை திட்டவட்டமாக மதிப்பீடு செய்வது சிரமமாகும். |
| (ஆ) | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் திட்டவட்டமான நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி மாகாண சபை உறுப்பினர்களால் முன்மொழியப்படும் அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது கீழே காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் அந்தந்த திட்டவட்டமானவற்றின் கீழ் செலவிடக் கூடிய செலவின எல்லையை கருத்திற் கொள்ளாமல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 நிதி ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 2019 முதல் 2023 மத்திய கால திட்டத்தினுள் சகல சிக்கல்களும் இனங்காணப் பட்டு முன்னுரிமை வேலைத் திட்டமொன்று மூலம் அச்சிக்கல்களை சீராக்க திட்டமிடப்பட்டுள்ளது. |

| நியதிகள் | சுற்றிக்கை சதவீதம் | செலவிட கூடிய தொகை | செலவிடப்பட்ட சதவீதம் | செவழித்த தொகை | செலவிடாத / எல்லை மிகைத்து செலவு செய்திருந்த தொகை |
|---|---|---|---|---|---|
| பொருளாதார உட்கட்டமைப்பு வசதிகள் | 30 | 51,000,000 | 23 | 39,466,576 | 11,533,424 |
| சமூக உட்கட்டமைப்பு வசதிகள் | 30 | 51,000,000 | 46 | 77,931,920 | (26,931,920) |
| சுய தொழில் மேம்படுத்தல் | 20 | 34,000,000 | 11 | 18,259,182 | 15,740,818 |
| நீர்ப்பாசனமும் விவசாயமும் | 10 | 17,000,000 | 01 | 2,502,649 | 14,497,351 |
| சமய கலாசார கலை அலுவல்கள் | 10 | 17,000,000 | 19 | 31,839,672 | (14,839,672) |

### 4.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஊவா மாகாண முகாமைத்துவ அபிவிருத்தி நிதியத்தின் ஒஹிய மற்றும் பெலகஹதன்ன பயிற்சி நிலையங்களுக்குரிய காணிகளின் சட்டரீதியான உரித்தினை ஊவா மாகாண சபைக்கு கையேற்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையங்களுக்குரிய காணிகளின் சட்டரீதியாக கையேற்க நடவடிக்கை எடுக்கப்படும். | எதிர்காலத்தில் நடவடிக்கை செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |
| (ஆ) மொ/பிபில யசோதரா பாலிக்கா வித்தியாலயத்திற்காக 05 ஏக்கர் 02 றூட் 22 பேர்ச் அளவிலான காணிப் பகுதியொன்றை தனியார் தரப்பினரிடமிருந்து 2017 பெப்ரவரி 02 ஆந் திகதி ரூபா 4,800,000 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், காணி ஆணையாளர் அலுவலகத்தில் 2015 பெப்ரவரி 23 ஆந் திகதியே பதிவு செய்யப்பட்டிருந்தது. மேலும் காணியின் உடமை உரித்து 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் உறுதிப்படுத்தப்படாமல் இருந்ததுடன் மொனறாகல சிரேஷ்ட நில அளவையாளரின் 2012 ஆகஸ்ட் 22 ஆந் திகதி அளவீட்டு அறிக்கையின் பிரகாரம் இக்காணியில் 0.3768 ஹெக்டேயர் 04 வெளிநபர்களினால் அனுமதியின்றி கையேற்கப்பட்டுள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. | ஊவா மாகாண சபைக்குரிய காணிகளின் உடைமை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உடைமை உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |

| | | | |
|---|---|---|---|
| (இ) | ஊவா மாகாண பிரதான அமைச்சு மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணி மின்சக்தி மற்றும் எரிசக்தி, நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் 2018 ஆம் ஆண்டிற்காக செயற்படுத்தப்பட்ட நுண்பாக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள், விசேட கிராமிய சுற்றுலா மற்றும் மிகவும் வறிய குடும்பங்களை வறுமையிலிருந்து மீட்டல், விசேட தேவையையுடைய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித்திட்டங்கள் போன்ற அபிவிருத்தி செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது செயற்திட்டத்தை இனங்காண்பதற்காக முறையான நடைமுறையொன்று தாபிக்கப்பட்டிருக்கவில்லை. | மூலதன செயற்திட்டங்களை இனங்காண்பதற்கு முறையான நடைமுறையொன்று ஸ்தாபிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தின் போது ஸ்தாபிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் |
| (ஈ) | 2018 சனவரி 16 ஆந் திகதிய PC/3/2/2018-11 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு செயலாளரின் கடிதத்தின் பிரகாரம் விசேட தேவைகளையுடைய கிராமங்களை அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தும் போது பொருத்தமான நியதிகளை நிர்ணயித்து அதன் பிரகாரம் முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்தப்பட வேண்டிய போதிலும் பிரதான அமைச்சு மற்றும் நிதி திட்டமிடல், சட்டம் மற்றும் சமாதானம், கல்வி, உள்ளூராட்சி, காணி மின்சக்தி மற்றும் எரிசக்தி, நிர்மாணம் மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. அவ்வாறு செயற்திட்டங்களை திட்டமிடும் போது பங்களிப்பு நடைமுறையொன்று ஊடாக அபிவிருத்தி முன்னுரிமை இனங்காணப்பட்டிருக்கவில்லை. | முன்னுரிமை வழங்கப்பட வேண்டிய செயற்திட்டங்களை இனங்கண்டு அவற்றை செயற்படுத்தவது தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும். | கூடிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் மேலும் சரி செய்யப்படும். |
| (உ) | ஊவா மாகாணத்திற்குள் பயணிகள் போக்குவரத்து சேவைகளையும், ஊவா மாகாணத்திற்கு பொருந்தும் வகையில் ஊவா மாகாணம் மற்றும் தொடர்புடைய மாகாணங்களுக்கு இடையே பயணிகள் போக்குவரத்து சேவைகளையும் முறைப்படுத்துதல் மற்றும் அச்செயற்பாடுடன் இணைந்த நோக்கத்தை நிறைவேற்றுவதை நோக்கில் ஊவா மாகாணத்திற்கு பயணிகள் போக்குவரத்து சேவை அதிகாரசபையை தாபிப்பதற்காக | பிரமாணங்களை அங்கீகரிப்பதன் மூலம் சேவைகளை முறைப்படுத்தப்பட வேண்டும். | சட்டப் பிரிவிற்கு தொடர்புபடுத்தப்பட்ட போதும் இதுவரை அங்கீகரிக்கப்பட்டிருக்க வில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | ஊவா மாகாண சபையின் 2001 இன் 01 ஆம் இலக்க பயணிகள் போக்குவரத்து சேவை நியதிச் சட்டத்திற்கான பிரமாணங்கள் 2018 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஊ) | விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார, சுற்றுலா, போக்குவரத்து, கலாசார மற்றும் புடவைக் கைத்தொழில் அமைச்சின் 2017 ஆம் ஆண்டில் மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி மானியங்களின் கீழ் எல்ல நகரின் அரங்கத்தின் மேற்பகுதியின் நிலத்தை தயார்ப்படுத்தி பூஞ் செடிகள் நட்டு அலங்கார நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ரூபா 700,200 செலவிடப்பட்டிருந்தது. பூச்செடிகள் அதிகளவில் சேதமடைந்திருந்தாக 2018 நவம்பர் 13 ஆந் திகதி மேற்கொண்ட கணக்காய்வு வெளிக்கள பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. | சொத்துக்களை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | வெப்பமான காலநிலை காரணமாக சில நபர்கள் கன்றுகளை பிடுங்கி எடுத்துச் செல்லப்பட்டிருந்தமையால் பூஞ் செடிகள் சேதமடைந்திருந்தன. |
| (எ) | 2017 திசெம்பர் 24 ஆந் திகதி பொரலந்த கால்நடை பண்ணைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 48,000,000 பெறுமதியான இறக்குமதி செய்யப்பட்ட 100 கர்ப்பிணி மாடுகளில் ரூபா 3,840,000 பெறுமதியான 8 மாடுகள் இறந்திருந்தன. சுகாதார பாதுகாப்பாக வைத்திருப்பதற்கு பொருத்தமான மாட்டுத்தொழுவமொன்று பண்ணையில் காணப்படாமை கால்நடைகள் இறந்தமைக்கான காரணங்களாக அமைந்திருந்தன. | சுகாதார பாதுகாப்பாக கால்நடைகளை வைத்திருப்பதற்கு பொருத்தமான மாட்டுத்தொழுவமொன்று நிர்மாணிக்கப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரால் குறிக்கப்பட்ட திகதியில் மாட்டுத் தொழுவத்தின் வேலைகள் பூர்த்தி செய்து கையளிக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஏ) | 2018 நவம்பர் 31 ஆந் திகதி வரை இறக்குமதி செய்யப்பட்ட மாடுகள் ஈன்ற 89 கன்றுகளில் 45 மரணித்திருந்தன. சுகாதார பாதுகாப்பான வகையில் கன்றுகளை பாதுகாக்கப்படாமையால் நோய் வாய்ப்பட்டதால் இவ்வாறு இறந்ததாக கண்டறியப்பட்டது. | சுகாதார பாதுகாப்பாக கால்நடைகளை கவனிக்க வேண்டும். | ஒப்பந்தக்காரால் குறிக்கப்பட்ட திகதியில் கன்றுத் தொழுவத்தின் வேலைகளை பூர்த்தி செய்து கையளிக்கப் பட்டிருக்கவில்லை. |

**4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | பண்டாரவல மாவட்ட வைத்தியசாலையின் உளநல மருத்துவ பிரிவின் மூலம் | பௌதீக வசதிகளை வழங்குவதற்கு | நிதிஏற்பாடு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் |

| | | | |
|---|---|---|---|
| | அபிவிருத்தி செய்வதற்காக சுவதிவி நிகழ்ச்சித்திட்ட மொன்றை செயற்படுத்தி எண்பதுக்கு அண்மித்த நோயாளர்களுக்கு சேவை வழங்கி வந்த போதிலும் அதற்கு தேவையான கட்டிடங்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய பௌதீக வசதிகள் போதியளவில் வழங்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். | வழங்கப்படுவதால் சகல தேவைகளையும் ஒரே தடவையில் பூர்த்தி செய்தல் சிரமமாகும். |
| (ஆ) | 2015,2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் மாகாண சபை உறுப்பினர்களால் 33 கிராம சேவையாளர் பிரிவுகளுக்காக முன்மொழியப்பட்டிருந்த எந்தவொரு திட்டதிட்ட அடிப்படை அபிவிருத்தி முன்மொழிவொன்றும் செயற்படுத்தியிருக்கவில்லை. அத்துடன் மாகாண சபையால் கோரப்பட்டுள்ள திட்டவட்ட மானிய செயற்திட்ட முன்மொழிவு தொடர்பாக பிரதேசத்தின் பொதுமக்களுக்கு தொடர்புபடுத்தும் முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. தரவு முறைமையின் பிரகாரம் ரிதீமாலியத்த செயலக பிரிவின் கந்துபெத்த கிராம சேவையாளர் பிரிவின் ஆரோக்கிய வசதிகள் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதுடன் 178 குடும்பங்கள் குடிநீரை பாதுகாப்பற்ற கிணற்றிலிருந்து பெற்று வந்தனர். மேலும் மலசலகூட வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை 96 ஆகவும் குழி மலசலகூடங்களை பயன்படுத்தும் குடும்பங்களின் எண்ணிக்கை 63 ஆக இருந்ததுடன் மண் சுவர்களுடனான 101 வீடுகள் காணப்பட்டன. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிதிஏற்பாடு மேற்கொண்டு எதிர்வரும் ஆண்டுகளில் செயற்படுத்தப்படுவதுடன் எதிர்காலத்தில் பொருத்தமான நலனாளிகளை முறையான இனங்காணும் நிகழ்ச்சித் திட்டமொன்று தயாரிக்கப்படும். |
| (இ) | ஹாலிஎல பிரதேச செயலக பிரிவின் கூடுதலாக வேலையின்மை காணப்படும் போகஹமடிதே கிராம சேவையாளர் பிரிவிற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் எவ்வித சுயதொழில் வாய்ப்பிற்காக எந்த உதவியும் வழங்கப்பட்டிருக்கவில்லை. 2015 திசெம்பர் 30 ஆந் திகதிய 2016/01 ஆம் இலக்க நிதி ஆணைக்குழு சுற்றறிக்கையின் பிரகாரம் சமய கலாசார மற்றும் கலை அலுவல்கள் கூறின் கீழ் ஊவா மாகாணத்தில் அழிந்து கொண்டு போகும். சம்பிரதாய கலாசார நடவடிக்கைகளில் பாரம்பரிய நடனம் மற்றும் கலை அலுவல்கள் இனங்காணப்பட்டு மேம்படுத்தப்பட்டு பாதுகாப்பதற்காக நிகழ்ச்சித்திட்ட மொன்று செயற்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | திட்டவட்டமான நிகழ்ச்சிகளுக்காக தகவல்கள் கலாசார அமைச்சிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டு நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. |

## 4.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 4.4.1 விளைவற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாணத்தின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்திடமிருந்து பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட்டுள்ள காலம் திட்டவட்டமாக இனங்காண் முடியாத 10 உபகரணங்கள் அலகு மற்றும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாத 03 உபகரண அலகுகள் விளைவற்றுக் காணப்பட்டன. | மாகாண சபையிடமுள்ள வளங்களை உயர் இயலளவில் பயன்படுத்த வேண்டும். | குறித்த சொத்துக்கள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்படும் முறை தொடர்பான குழுவொன்று நியமிக்கப்பட்டு பரிந்துரை பெற்றுக்கொள்ளப்பட்டிருந்ததுடன் அதன் பிரகாரம் உரிய பொருட்களை ஏலத்தில் விற்பனை செய்ய மதிப்பீடு செய்ய மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது |
| (ஆ) | ஊவா மாகாணத்தின் முகாமைத்துவ அபிவிருத்தி நிறுவனத்திற்குரிய ஒஹிய பயிற்சி நிலையத்தில் பயிலுனர்களுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலா பிரயாணிகளுக்கும் தங்குமிட வசதிகளை வழங்குவதற்கு 10 அறைகள் காணப்பட்ட போதிலும் 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 2920 மற்றும் 1900 நாட்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. அதன் பிரகாரம் நிறுவனங்கள் விரிவுரை மண்டபம் மற்றும் தங்குமிடங்கள் உயர் இயலளவில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபையிடமுள்ள வளங்களை உயர் இயலளவில் பயன்படுத்த வேண்டும். | கணக்கய்வினால் கூட்டிக் காட்டப்பட்டுள்ள நிலைமைகளை தவிர்த்துக் கொள்வதற்காக நிறுவனத்தினால் விரிவான விளம்பரமொன்று வழங்கப்பட்டு மிகவும் கவர்ச்சியான நிலையமொன்றாக மாற்றுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | பண்டாரவல மாவட்ட வைத்தியசாலைக்கு 2017 ஒக்தோபர் 20 ஆந் திகதி நன்கொடையாக வழங்கப்பட்டிருந்த எகோ பரிசோதனை இயந்திரம் வைத்தியர் ஒருவர் மற்றும் ஏனைய வசதிகள் இல்லாமை காரணமாக விளைவற்றுக் காணப்பட்டது. | மாகாண சபையிடமுள்ள வளங்களை உயர் இயலளவில் பயன்படுத்த வேண்டும். | வைத்தியசாலைக்கு இவ்வியந்திரத்திலிருந்து பயன்பாடொன்றில்லாமையால் தேவையுள்ள வேறொரு வைத்தியசாலைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 264,548 செலவு செய்து வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலையின் உயிரியல் வாயு அலகு 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டது. | மாகாண சபையிடமுள்ள சொத்துக்களிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஒப்பந்தக்காரர் அறிவுறுத்தப்பட்ட போதும் இறுதி வேலைகள் நிறைவேற்றப்படாமையால் அவரை கறுப்பு பட்டியலுக்கு உட்படுத்த நடவடிக்கை எடுக்கப்ட்டுள்ளது. |
| (உ) | பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலையின் குடிநீர் தேவைப்பாட்டிற்காக வைத்தியசாலை வளவில் அமைந்துள்ள நீர்மலைத் தொடரிலிருந்து பெற்றுக்கொள்ளும் நீரை சுத்திகரிப்பதற்காக ரூபா 43,991 பெறுமதியான உபகரணமொன்று 2018 சனவரி 20 நிறுவப்பட்டிருந்ததுடன், அந்த உபகரணம் 2018 மே மாதம் செயலற்று போனது. இந்த உபகரணத்திற்காக ஓராண்டு உத்தரவாத காலம் வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் 11 ஆந் திகதி வரை உரிய நிலைக்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை. | மாகாண சபையிடமுள்ள சொத்துக்களிலிருந்து பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்திடமுள்ள இயந்திரத்தை திருத்தம் செய்வதற்கு மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஊ) | பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலையில் கண் சிகிச்சை வைத்தியர் ஒருவர் இல்லாமையால் 2015 ஆம் ஆண்டு முதல் கண் சிகிச்சைக்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக சிகிச்சைகளுக்காக பயன்படுத்தப்படும் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | தேவையான மனித வளங்களை பெற்று வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்களை பயன்பாட்டிற்கு எடுத்து பொதுமக்களுக்கு சேவை புரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தேவையான மனித வளங்களை பதுளை வைத்தியசாலையிலிருந்து பெற்று சிகிச்சை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (எ) | ஸ்பிரிங்வெலி மாவட்ட வைத்தியசாலையின் 2017 ஒக்தோபர் 06 ஆந் திகதி வைத்தியசாலையில் பொருத்தியிருந்த கைவிரலடையால இயந்திரம் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | உரிய சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | தொழிற்சங்கங்களின் எதிர்ப்பு காரணமாக கைவிரலடையால இயந்திரம் உரிய செயற்பாட்டிற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | குடும்ப சுகாதார சேவை உத்தியோகத்தர் ஒருவர் இல்லாமை காரணமாக ஸ்பிரிங்வெலி மாவட்ட வைத்தியசாலையின் பிரவச வார்ட் மூடப்பட்டிருந்ததுடன் அதன் உபகரணங்கள் விளைவற்றுக் காணப்பட்டன. | தேவையான மனித வளங்களை பெற்று வழங்கப்பட்டுள்ள பௌதீக வளங்களை பயன்பாட்டிற்கு எடுத்து பொதுமக்களுக்கு சேவை புரிவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இணைக்கிடப்பட்டிருந்த உத்தியோகத்தர் பிரசவ விடுமுறை பெற்றுச் சென்றிருந்ததுடன் மிகவும் குறைந்த பிரசவங்கள் இடம்பெறுவதால் புதிய உத்தியோகத்தர் ஒருவரை இணைக்காமல் இருக்க தீர்மானிக்கப்பட்டது. |
| (ஐ) | உலக வங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் 2017/2018 ஆம் ஆண்டுகளில் நிதிஏற்பாடு பயன்படுத்தப்பட்டு பதுளை பிரதேச சுகாதார அலுவலகத்திற்காக கொள்வனவு செய்த ரூபா 1,079,460 பெறுமதியான வெவ்வேறு உபரகணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படமால் விளைவற்றுக் காணப்பட்டன. | உபகரணங்களை பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். அதற்கான காரணங்களாக<br>1. அவசர வேண்டுகோளுக்கு வழங்குவதற்கு<br>2. பகிர்ந்தளித்தல் கிரயம் காரணமாக வேறு கடமைகள் வரும் வரை காத்திருத்தல்.<br>3. வைத்தியசாலைக்கு உபகரணங்கள் தேவைப்படாமை.<br>4. இவ் உபகரணங்கள் கிடைத்து அதிகளவு காலம் கடக்காமை |
| (ஒ) | இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் வெளிமட ஆதார வைத்தியசாலைக்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 120,000 பெறுமதியான உபரகணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படமால் விளைவற்றுக் காணப்பட்டன | உபகரணங்கள் பயன்பாட்டிற்கு எடுக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இந்த உபகரணங்கள் நோயாளர் சிகிச்சைகளுக்காக பயன்பாட்டிற்கு எடுக்கப்படாததுடன் செயற்பாட்டு மட்டத்தில் காணப்படுகின்றது. |
| (ஓ) | பிபில ஆதார வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சை பிரிவிற்காக 2016 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 6,652,399 பெறுமதியான மருத்துவ உபகரணங்களில் ரூபா 3,534,250 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வைத்தியாலையில் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்ததுடன் ரூபா 3,118,149 பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரை பயன்பாட்டிற்கு எடுக்கப்படமால் விளைவற்றுக் காணப்பட்டன | பயன்படுத்தப்படாத உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | பொது சுகாதார சேவை செலவினத் தலைப்பின் கீழான நிதிஏற்பாடுகளை பயன்படுத்தி 2016 ஆம் ஆண்டின் போது தியதலாவ, வெலிமட மற்றும் வெள்ளவாய ஆதார வைத்தியசாலைகளுக்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 12,650,000 பெறுமதியான 10 இரத்து வடிகட்டல் இயந்திரங்கள் Dialysis Machine) மற்றும் ரூபா 15,879,875 ஆன ஏனைய உபகரணங்கள் 2018 ஆம் ஆண்டின் இறுதி வரையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படமால் விளைவற்றுக் காணப்பட்டன | பயன்படுத்தப்படாத உபகரணங்களை பயன்பாட்டிற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவிக்கவில்லை. |
| (∴) | 352.56 ஹெக்டேயர் காணி 02 ஆண்டு முதல் 10 ஆண்டு காலமாகவும் 1157 கட்டிடங்கள் 02 முதல் 10 ஆண்டு காலமாகவும் 38 மோட்டார் வாகனங்கள் 6 மாதங்கள் முதல் 30 வருட காலமாகவும் 8 இயந்திரங்கள் 03 முதல் 14 வருடங்களாகவும் விளைவற்றும் குறைப்பயன்பாட்டிற்கும் உட்பட்டு காணப்பட்டதுடன் காலம் இனங்காணப்படாத 84.24 ஹெக்டேயர் காணி 299 கட்டிடங்கள் 130 வாகனங்கள், 15668 இயந்திரங்கள் பொறிகள் மற்றும் 485 ஏனைய சொத்துக்களாக இருந்தது. | விவைற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்களை தொடர்ச்சியாக பயன்படுத்துவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | ஒவ்வொரு நிறுவனத்தினது இனங்காணப்பட்ட விவைற்ற மற்றும் குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள் தொடர்பான தேவையான நடவடிக்கை உரிய நிறுவனங்களால் எதிர்காலத்தில் எடுக்கப்படும். |
| (க) | உலக வங்கி உதவியின் கீழ் செயற்படுத்தப்படும் ‘‘இரண்டாவது சுகாதார துறை அபிவிருத்தி செயற்திட்டம் 2017’’ ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளில் ரூபா 1,995,000 செலவு செய்து ஊவா மாகாண சுகாதார சேவைகள் அலுவலகத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 35 கைவிரலடையால இயந்திரங்கள் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமல் விளைவற்றுக் காணப்பட்டன. | செயல்நடவடிக்கைத் திட்டத்திடன் பிரகாரம் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் முகாமைத்துவத்தினால் கவனம் செலுத்த வேண்டியதுடன் விளைவற்ற சொத்துக்களை பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்ந்து பயன்படுத்த வேண்டும். | ஆதார வைத்தியசாலைகளிலும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகங்களில் மாத்திரம்- தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளது. |

### 4.4.2 கையேற்கப்படாத சொத்துக்களை பயன்படுத்துதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அரசினதும் ஏனைய நிறுவனங்களுக்குரிய 23 காணிகள், 65 கட்டிடங்கள் மற்றும் கட்டிடங்கள் 7 மோட்டார் வாகனங்கள் என்பவற்றை முறைப்படி கையேற்கப்படாமல் பயன்படுத்தப்பட்டு வந்தன. | பயன்படுத்தப்படும் சொத்துக்களின் உரித்தை முறையாக கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கையேற்கப்படாத சொத்துக்களுக்கு கீழாக உள்ளடக்கப்பட்டுள்ள சொத்துக்களை கையேற்குமாறு உரிய நிறுவனங்களுக்கு அறவூட்டப்பட்டுள்ளதுடன் காணி கையளிக்கும் நடவடிக்கைகளில் தாமதமொன்று காணப்படுகின்றது. |

### 4.5 செயற்திட்டங்களை செயற்படுத்தல்

### 4.5.1 தாமதமான செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டிலிருந்து மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் கீழ் கொஸ்லந்த உடமுல்ல கால்வாயை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக மாகாண நீர்ப்பாசன பொறியியலாளரினால் ரூபா 1,096,808 பெறுமதிக்கு 2018 ஒக்தோபர் 03 ஆந் திகதி விவசாய அமைப்பிற்கு கையளிக்கப்பட்டிருந்தன. 2019 சனவரி வரையில் இந்த நிர்மாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்முன்னேற்ற அறிக்கையில் உரிய வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பௌதீக முன்னேற்ற 15 சதவீதம் எனவும் குறிப்பிடப்பட்டிருந்தது. | நிதிஏற்பாட்டை பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஆரம்ப வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் 15 சதவீதமாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன் கொடுப்பனவு செய்யப்படாமையால் எஞ்சிய திட்டங்களுக்கு உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மாகாண திட்டவட்டமான அபிவிருத்தி மானியங்களின் 2018 ஆம் ஆண்டின் போது நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த புத்தகலகஸ் ஆர வேலி குளத்தை புனர்நிர்மாணம் செய்யும் வேலை ரூபா 4,227,483 தொகைக்கு 2018 யூலை 24 ஆந் திகதி தனியார் நிறுவனமொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் 2018 ஒக்தோபர் 24 ஆந் திகதி வேலை பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் 2019 சனவரி வரையிலும் இந்நிர்மாணத்தினது எவ்வித புனரமைப்பு நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிஏற்பாட்டை பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு ஒப்பந்தக்காரர் அக்கறை செலுத்தாமை மற்றும் கட்டுநிதி கிடைக்காமை காரணமாக முற்பணத்தை கொடுப்பனவு செய்வதற்கு முடியாததன் பேரில் நிர்மாணத்தை ஆரம்பிக்க முடியாதிருந்ததுடன் எதிர்காலத்தில் ஒப்பந்தக்காரரை கறுப்புப்பட்டியல் இடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) சுகாதார அமைச்சின் தோட்ட வைத்தியசாலைகளை அபிவிருத்தி செய்யும் செயற்திட்டத்தின் கீழ் ஸ்பிரிங்வேலி வைத்தியசாலையின் 06 நிர்மாண செயற்பாடுகள் மத்திய மாகாண கட்டிடத் திணைக்களத்தினால் ரூபா 16,990,980 பெறுமதிக்கு 2017 மார்ச் 10 ஆந் திகதி தனியார் நிர்மாண கம்பனியொன்றுக்கு கையளிக்கப்பட்டிருந்தது. எனினும், அதில் 04 செயற்பாடுகள் கைவிடப்பட்டிருந்தன. நிர்மாண நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த 02 செயற்பாடுகள் 2017 யூலை 08 ஆந் திகதி அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், 2018 ஒக்தோபர் 04 ஆந் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | முறையான கண்காணிப்புடன் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 02 நிர்மாணங்கள் மாத்திரம் மந்தமாக செயற்படுத்தப்பட்டு வருவதுடன் நிர்மாணம் மற்றும் மேற்பார்வை நடவடிக்கை மத்திய மாகாண கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. |

### 4.5.2 கைவிடப்பட்ட செயற்திட்டங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீர்ப்பாசனத் திணைக்களம் 02 விவசாய அமைப்புக்களுடன் உடன்படிக்கை செய்யப்பட்ட 02 செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பாக அவ்விசாய அமைப்புகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன், வேறு விவசாய அமைப்புகளுக்கு அந்நிர்மாணங்களை கையளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ரூபா 3,888,123 ஆன நிதிஏற்பாடு பயன்படுத்த முடியாதிருந்ததுடன் அச்செயற்திட்டங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களும் நிறைவேற்ற முடியாமல் இருந்தது. | நிதிஏற்பாட்டை பயன்படுத்தி எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | விவசாய அமைப்புக்களின் அக்கரை அடிப்படையில் நிர்மாணம் ஆரம்பித்தல் தாமதமாக இருந்ததுடன் இந்நிர்மாணங்கள் எதிர்வரும் திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட உள்ளது |

### 4.5.3 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஊவா மாகாண விவசாய அமைச்சினால் ஜெய்கா உதவியின் கீழ் செயற்படுத்தப்பட்ட சிறு நீர்ப்பாசன புனரமைப்பு மற்றும் மீள்நிர்மாண நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் மஹகடவர குளத்தின் மீளமைப்பு நடவடிக்கைகள் 2004 ஆம் ஆண்டின் போது ரூபா 19,411,960 செலவிடப்பட்டிருந்த போதிலும் 2018 ஒக்தோபர் வரையிலும் விவசாயிகளுக்கு காணி பகிர்ந்தளிக்கப்படாமையால் அது விளைவற்ற செலவினமொன்றாக இருந்தது. குளத்தின் புனரமைப்பு வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் அதற்காக தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 772/22 ஆம் இலக்க 1993 யூன் 23 ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | தேசிய சுற்றாடல் சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 772/22 ஆம் இலக்க 1993 யூன் 23 ஆந் திகதிய வர்த்தமானிப் பத்திரத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | 2002/2004 ஆரம்பிக்கப்பட்டுள்ள பழைய குளம் காரணமாக அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன் இக்குளத்திலிருந்து பெற்றுக்கொண்ட நீரில் இருந்து முறையற்ற சேனைப் பயிர்ச்செய்கைக்கும் தெமழிய குளத்தில் நீர் முடிவுற்றதன் பின்னர் நிரப்புவதற்கும் பயன்படுத்தப்படுவதுடன் வனப் பரிபாலனத் திணைக்களத்தினால் அக்காணி விடுவிக்கப்பட்டதும் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | ஊவா மாகாண விவசாய, நீர்ப்பாசன, கால்நடை உற்பத்தி மற்றும் நன்னீர் மீன்பிடி நடவடிக்கை தொடர்பான அமைசினால் 2017 ஆம் ஆண்டின் போது விவசாய வீதி அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ரம்புக்பொத கால்வாயின் அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,820,952 முடிவுப் பெறுமதி அடிப்படையில் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 1,169,642 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. எனினும் திணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ள ஓரச்சுவர் வளைந்து மீண்டும் ஆதாரமொன்று பொருத்தப்பட்டு தயார் செய்யப்பட்டிருந்ததுடன் பதுளை பிரதேச பொறியியலாளரால் இவ்வீதி வாகனப் போக்குவரத்திற்கு பொருத்தமற்றதென பரிந்துரைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே வீதியின் மத்தியில் அமைந்துள்ள 03 மின்சார தூண்கள் 2018 செப்தம்பர் 05 ஆந் திகதி வரை அகற்றப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது முறையான மேற்பாரவையுடன் மேற்கொள்ளப்பட்டு எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நோக்கி செல்லல் வேண்டும். | அதிக மழை காரணமாக பக்கச் சுவருக்கு சேதம் ஏற்பட்டிருந்ததுடன் அதற்கு ஆதாரம் ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. இறுதி பட்டியலுக்காக பணம் கொடுப்பனவு செய்யப்படாமை காரணமாக தேவையான நடவடிக்கைளை எதிர்காலத்தில் மேற்கொள்ளப்படும். மின்சார கம்பங்களை அப்புறப்படுத்துவதற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. |

## 4.6 பதவியணியினர் நிர்வாகம்

### 4.6.1 அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை

2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஊவா மாகாண சபையின் அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) மாகாண சபை, அமைச்சுக்கள்/ திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் (பாடசாலை பதவியணியினர் நீங்கலாக)**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்டது | உள்ளபடியானது | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 1436 | 1012 | 424 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 298 | 167 | 131 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 7912 | 6478 | 1434 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 6052 | 5028 | 1024 | - |
| (v) | ஏனையோர் (அமைய தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 998 | - | 998 |
| | மொத்தம் | 15,698 | 13,683 | 3,013 | 998 |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண அரச சேவைக்குரிய 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், முகாமைத்துவ சேவை உதவியாளர் ஒருவர். சாரதியொருவர் மற்றும் அலுவலக உதவியாளர் ஒருவர் பாராளுமன்ற உறுப்பினர், தலைமை அமைச்சர் மற்றும் உறுப்பினர் பதவியணியினருக்கு இணைக்கப்பட்டிருந்தனர். | பதவிக்குரிய கடமைகளுக்காக உத்தியோகத்தர்களை ஈடுபடுத்த வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

**(ஆ) பாடசாலை பதவியணியினர்**

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளபடியான | வெற்றிடங்கள் | மிகை |
|---|---|---|---|---|---|
| (i) | அதிபர்கள் | 1077 | 695 | 382 | - |
| (ii) | ஆசிரியர்கள் | 17026 | 16723 | 303 | - |
| (iii) | உதவிப் பதவியணியினர் | 2127 | 1571 | 556 | - |
| (iv) | ஏனைய (அமைய, தற்காலிகம்/ ஒப்பந்த அடிப்படையில்) | - | 1341 | - | 1341 |
| | **மொத்தம்** | 20230 | 20330 | 1241 | 1341 |

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 382 அதிபர் வெற்றிடங்கள், 303 ஆசிரிய சேவை வெற்றிடங்கள் மற்றும் 556 உதவி பதவியணியினர் வெற்றிடங்கள் நிரப்பபட்டிருக்கிவல்லை. | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | எதிர்கால ஆட்சேர்ப்பின் போது வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும். |

**4.6.2 கல்வி தொடர்பான பதவியணியினர் நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) பாடசாலை சம்பளப் பட்டியலிலிருந்து சம்பளம் பெறும் பசரை கல்வி வலயத்தின் 04 பாடசாலைகளில் 04 ஆசிரியர்கள் கற்பித்தல் செயற்பாட்டிற்கு புறம்பாக வேறு சேவைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆசிரியர்கள கற்பித்தல் நடவடிக்கைகளில் ஈடுபட வேுண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) மஹியங்கன கல்வி வலயத்தில் ஆசிரிய வெற்றிடங்கள் 274 காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஏனைய கல்வி வலயங்களின் 25 ஆசிரியர்கள் இணைக்கப்பட்டிருந்தனர் | வெற்றிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | 13 ஆசிரியர்களின் இணைப்பு காலம் முடிவடைந்து இவ்வலயத்தில் சேவை புரிவதுடன் 05 பேர் ஏனைய வலயங்களுக்கு இடமாற்றம் பெற்றுச் சென்றிருந்ததுடன் 07 பேர் தொடர்ந்தும் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். |
| (இ) மஹியங்கன கல்வி வலயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் பதவி மற்றும் பிரதி வலயக் கல்விப் பணிப்பாளர் பதவிகளுக்காக முறையே கல்வி நிர்வாக சேவையின் I ஆம் தரத்திலும் II ஆம் தர உத்தியோகத்தர்களும் நியமிக்கப்பட வேண்டிய போதிலும் III ஆம் தர உத்தியோகத்தர்கள் நியமனம் செய்யப்பட்டிருந்தனர். | கல்வி நிர்வாக சேவைப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | குறித்த தரத்திலுள்ளவர்கள் மஹியங்கன கல்வி வலயத்தில் இல்லாமையால் நியமனம் வழங்கப்பட்டது |
| (ஈ) வெளிமட கல்வி வலயத்தில் விசேட கல்வி விடயங்களுக்காக நியமனம் வழங்கப்பட்டிருந்த 05 ஆசிரியர்கள் வேறு பாடங்களை கற்பித்தல் மற்றும் அலுவலக நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | ஆசிரியர் குறித்த நியமனம் பெற்ற பாடங்களையே கற்றலுக்காக ஈடுபடுத்தப்பட வேண்டும். | வெளிமட வலயத்தில் 11 கல்வி பாடசாலைகள் காணப்பட்டன. அப்பாடசாலைகளில் இவ்வாறான ஆசிரியர்கள் மிகையாக காணப்படுவதால் வேறு நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். |

### 4.7 உள்ளூராட்சி நிறுவனங்களின் மேற்பார்வை

#### 4.7.1 நிலுவை வருமானம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, மீளாய்வாண்டில் மற்றும் முன்னைய ஆண்டிற்காக ஊவா மாகாணத்தின் உள்ளூராட்சி நமன்றங்களால் அறவிட ஆதனவரி மற்றும் ஏனைய நிலுவை வருமானங்கள் ரூபா 321,196,011 ஆக இருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |
| (ஆ) 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு, நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் ரூபா 143,013,514 ஆன முத்திரைக் கட்டணங்கள் ரூபா 163,065,240 தொகை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அறவிட வேண்டியிருந்தது. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

#### 4.7.2 வழங்கப்பட்டுள்ள மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்காக அறவிடுவதற்குள்ள தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண உள்ளூராட்சி மனறங்களின் பொறுப்பு வாய்ந்த தரப்பினருக்கு எதிராக விதிக்கப்பட்டிருந்த மிகை அறவீடுகளுக்காக 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,413,805 தொகை அறவிட வேண்டியிருந்தது. | சட்டரீதியான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்து தெரிவிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 5. கணக்களிதகைமையும் நல்லாளுகையும்

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஊவா மாகாண சபையின் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்களில் போதியளவில் உள்ளக கணக்காய்வொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. உள்ளகக் கணக்காய்வு மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தல்கள் தொடர்பாக முகாமையினால் முறையான நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் அது தொடர்பாக போதியளவு பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊவா மாகாண சபை நிதி விதி 133.2 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | கருத்துரை தெரிவித்திருக்கவில்லை. |

## 5.2 ஆண்டறிக்கையினை சபைக்கு சமர்ப்பிக்காமை

கடந்த 05 வருடங்களில் ஊவா மாகாண சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைகளை மாகாண சபைக்கு முன்னிலைப்படுத்தலின் நிலமை பின்வருமாறு ஆகும்.

| ஆண்டு | அறிக்கை வழங்கப்பட்ட திகதி | சபையில் முன்வைக்கப்பட்ட திகதி |
|---|---|---|
| 2013 | 10.02.2015 | 28.04.2016 |
| 2014 | 21.09.2015 | 14.07.2016 |
| 2015 | 06.12.2016 | 20.02.2017 |
| 2016 | 21.08.2017 | 28.09.2017 |
| **2017** | **28.09.2018** | **25.10.2018** |

## 5.3 தீர்வு செய்யப்படாத கணக்காய்வு அவதானிப்புக்கள்

கீழே காட்டப்பட்டுள்ள கணக்காய்வுப் பந்திகள் தொடர்பாக 2017 மார்ச் 23 ஆந் திகதிய நடைபெற்ற பொதுக் கணக்கு குழுவினால் வழங்கப்பட்டிருந்த கட்டளைகள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | தாபன விதிக்கோவையின் XIX ஆம் அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிரல்படுத்தப்பட்ட வீடு உரித்துள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து சம்பளத்தில் 10 சதவீதம் வாடகை அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக 2008 ஆகஸ்ட் 01 ஆந் திகதி முதல் ஊவா மாகாண சபையின் செயலாளர்களிடமிருந்தும் பிரதிப் பிரதான செயலாளர்களிடமிருந்தும் மாதமொன்றுக்கு ரூபா 500 பெயரளவிலான வீட்டு வாடகை அறவிடப்பட்டிருந்தது. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | கருத்து தெரிவித்திருக்கவில்லை. |
| (ஆ) | பண்டாரவெல மாவட்ட வைத்தியசாலைக்குரிய 2.66 பேர்ச் அளவிலான காணி அனுமதியின்றி வீடு நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக நில அளவைத் திணைக்களத்தினால் 2013 பெப்ரவரி 25 ஆந் திகதி அறிக்கையொன்று வழங்கப்பட்டிருந்ததுடன், வெளிமட ஆதார வைத்தியசாலை அமைந்துள்ள நியந்தகல பனத்த காணியில் 01 ஏக்கர் 0.8 பேர்ச் அளவில் அத்துமீறிய குடியிருப்பாளர்கள் நிரந்தர கட்டிடமொன்றை நிர்மாணித்துள்ளதாக கண்டறியப்பட்டிருந்தது, உரிய வைத்தியாசலைக்குரிய காணிகளின் எல்லைகளை சரி செய்வதற்காக முறையான | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | பிரதேச செயலாளர்களுடன் கலந்துரையாடி தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் |

| | | | |
|---|---|---|---|
| | நடைமுறையொன்று எடுக்கப்படாதிருந்ததுடன், அத்துமீரிய குடியிருப்பாளர்களை காணிகளிலிருந்து அகற்ற 1979 இன் 07 ஆம் இலக்க அரசின் காணி (உரித்தை மீளப் பெற்றுக்கொள்ளல்) சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுத்து சரியான உரித்தைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (இ) | வெளிமட பிரதேச செயலக அதிகாரப் பிரதேசத்தின் அலகொலகால கிராம சேவையாளர் பிரிவின் மீபிலிமானவில் அமைந்துள்ள 11.056 ஹெக்டேயரிலான காணியில் வர்த்தக நடவடிக்கை யொன்றிற்காக 30 ஆண்டு காலத்திற்கு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்கு 2011 மே 09 ஆந் திகதி காணி ஆணையாளரால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. காணி குத்தகைக்கு வழங்குவது தொடர்பாக குத்தகை உடன்படிக்கை மேற்கொள்வதற்கோ குத்தகை உரித்தொன்றை தயாரிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபத்தினால் இக்காணியில் 19 ஏக்கர் அளவான காணியை ஆண்டொன்றிற்கு ரூபா 2,755,000 குத்தகை வாடகைக்கு 2012 நவம்பர் 06 ஆந் திகதி முதல் பயிர்செய்கைக்காக தனியார் தரப்பினருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மாவட்ட விலை மதிப்பாளரின் 2012 யூன் 14 ஆந் திகதிய மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் 2012 இலிருந்து 2016 ஆம் ஆண்டு வரை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திடமிருந்து ஊவா மாகாண சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 8,680,000 தொகையான குத்தகை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்குக் குழு கட்டளையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தின் நீண்டகால குத்தகை அனுமதியை இரத்துச் செய்து காணி ஆணையாளரின் ஆலோசணையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |